# மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel


சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 07 செவ்வாய்க்கிழமை 17.09.2024 கதிர் 363

# பிரசாரம் முடிவுக்கு வரும் நிலையில் அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்




ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 196 முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் முடிவுக்கு வரவுள்ள நிலையில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஜூலை 31ஆம் திகதியில் இருந்து செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை 4, 411 ஆக அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதில் 1,379 முறைப்பாடுகள் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 3,032 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

6➤

## புவிசார் அரசியல் போட்டியில் எந்த சக்திக்கும் அடிபணியோம்

### உறுதியாகக் கூறுகின்றார் அநுரகுமார



புவிசார் அரசியல் போட்டியில் எந்தவொரு சக்திக்கும் அடிபணியமாட்டோம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசநாயக்க தெரிவித்துள்ளார். நமது கடல் நிலம் மற்றும் வான்வெளி ஆகியவை இந்தியாவையோ அல்லது பிராந்திய ஸ்திரத்தன்மையையோ அச்சுறுத்தும் வகையில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்வோம்என அவர் தெரிவித்துள்ளார்

6➤

## அதிகாரத்துக்கு வந்த பின்னர் சகலரையும் பாதுகாப்போம்

### பரப்புரையில் சஜித் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகள் அத்தோடு கட்சிகளைச் சாராத குழுக்களில் உள்ளவர்கள் என அனைவரையும் நாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு மனிதநேயத்தின் நாமத்தினால் பாதுகாப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 65 ஆவது

6➤





## வாக்கெண்ணும் நிலையமான மத்திய கல்லூரியில் ஆய்வு

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவாத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டது.

இக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து,

6➤

## தேர்தலில் வாக்களிக்க 17,140,354 பேர் தகுதி

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெற வுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு 17,140,354 பேர் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து 1,765,351 பேரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 1,881,129 பேரும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,024,244 பேரும், கண்டி மாவட்டத திலிருந்து 1,191,399 பேரும், மாத்தளை மாவட்டத்தில்429,991பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 605,292

6➤

# பொது வேட்பாளருக்கு ஆதரவாக யாழ். நகரில் பரப்புரைக் கூட்டம்





தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி பொது வேட்பாளர் அரிய நேந்திரனை ஆதரிக்கும் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நேற்று மாலை இடம் பெற்றது. இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டர். இதன்போது பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், க. அருந்துவபாலன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், காக்கா என்று அழைக்கப்படும் மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரை ஆற்றினர்

## மலையகம் ரணிலுக்கே முழு ஆதரவு

### வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

மலையக மக்களின் முழுமையான ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கப்பெறும்என்று இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில்நேற்றுதிங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் இயலும்' பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றுகையில், "இந்த மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது ரணில் விக்கிரமசிங்க இம்முறை பதுளை மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்பது உறுதியாகின்றது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது கடமையை நிறைவேற்றி தோட்டத் தொழிலாளர்களின் 100 வீதம் வாக்குகளை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்." - என்றார்.

## தையிட்டியில் தொடரும் போராட்டம்



தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் இன்றும் தொடர்ந்து இடம்பெற்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் கனக ரட்ணம் உட்பட முன்னணி உறுப்பினர்கள் சிலர் இதில் பங்கேற்றனர்.

## தேர்தலுக்குப் பின்னரான வன்முறை குறித்து பதற்றப்படத் தேவையில்லை

### பப்ரல் அமைப்பின் பணிப்பாளர் வேண்டுகோள்



ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னரான வன்முறைகள் குறித்து பதற்றமடைவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பப்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் பொதுமக்கள் அமைதியாக இருக்கவேண்டும் தேர்தல் வாக்களிப்பிற்கு பின்னரான வன்முறைகள் குறித்த பதற்றத்திற்கு பலியாக கூடாது என பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து எங்களிற்கு எந்த தகவலும் கிடைக்கிவில்லை என தெரிவித்துள்ள அவர் வன்முறைகள் அமைதியின்மை குறித்த பல தகவல்கள் உறுதிப்படுத்தப்படாதவை, அதனை எச்சரிக்கையுடன் கையாள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் சமூக அமைதியை பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர் ஐக்கியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மதத்தலைவர்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் அரசியல் செயற்பாட்டாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

நாங்கள் அனைவரையும் பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டு அமைதியான சூழலிற்கு பங்களிப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம், அனைத்து பிரஜைகளும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது தேர்தல் வேட்பாளர்களின் கௌரவத்திற்கும், தேர்தல் நடைமுறைக்கும் அவசியமான விடயம் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

18 ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து பிரசாரங்களும் நிறுத்தப்படவேண்டும், 18 ஆம் திகதிக்கு பின்னர் சமூக ஊடக பிரசார நடவடிக்கைகளை நிறுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம், வெளிநாடுகளில் இருந்து இயக்கப்படும் சமூக ஊடக பக்கங்களிற்கும் இது பொருந்தும், மீறல்களில் ஈடுபடுபவர்கள் சட்டநடவடிக்கைகளை எதிர்கொள்வேண்டிவரும் என அவர் தெரிவித்துள்ளார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட


காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அநுரவின் கூட்டத்தில் பறந்த புறா 2 இளைஞர்கள் மீது விசாரணை



(சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ் )

ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்கவை ஆதரித்து சம்மாந்துறையில் இடம்பெற்ற கூட்டத்தில் மின்ஒளியுடன் பறந்த புறா பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், இது தொடர்பில் இருவர் கைதாகி விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

இக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸ ாநாயக்க பேசிக்கொண்டு இருக்கும் போது கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு மேலால் டுநுனு டபைாவ பொருத்திய “புறா” ஒன்று பறந்தது. அது மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இது தொடர்பாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழி காட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதி காரிகே.சதீஸ்கர்தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, கூட்டம் நடைபெற்ற பகுதியில் இருந்து நேற்று 18,19 வயது மதிக் கத்தக்க புறா வளர்ப்பில்ஈடுபடும்இரு இளைஞர்களை விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

செய்த போது “சமூக ஊடகங்களில் காணொளியை பதிவு செய்வதற்காக இரவு வேளையில் காலில் டுநுனு டபைாவ எனப்படும் ஒரு வகையான மின் விளக்கினை பறவையின் காலில் பொருத்தி இரவு வேளையில் அதனை தினமும் பறக்க விடுவது தமது வழமை என்று அவர்கள் வாக்குமூலம் வழங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரிய வெங்காயம் விலை அதிகரித்தது



தற்போது சந்தையில் உள்நாட்டில் பயிரிடப்படும் பெரிய வெங்காயம் கிலோ ஒன்று 260 ரூபாய் முதல் 280 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பெரிய வெங்காய இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையே, விலை அதிகரிப்புக்குக்காரணமென சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# பேரினவாதிகளுக்கே இனிமேலும் வாக்களிக்க தமிழர் முட்டாள்களா?

## கேள்வி எழுப்பும் முன்னாள் தவிசாளர் நிரோஸ்



இலங்கை பொருளாதார ரீதியில் திவாலானமைக்கு தமிழ் மக்கள் மீதான யுத்த செலவீனமும் இனவாதத்தினால் தமிழ் மக்களை நாட்டின் அபிவிருத்தியில்பயன்படுத்தத் தவறியமையுமே காரணம் என்ற உண்மையை ஏற்று சிந்திக்காத செயல்படாத பேரினவாதத் தலைவர்களை நோக்கி நாம் இனியும் வாக்களிக்க முடியாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அச்சுவேலி முரசொலி முன்றலில் இடம்பெற்ற தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்திய பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும், தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவை என வெற்றிவாய்ப்புக்காக போட்டியீடுகின்ற வேட்பாளர்கள் முன்டியடிக்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்கும் போது, கடந்த காலத்தில் தமது அரசியல் நீரோட்டத்தில் எந்தளவு தூரம் இனவாத அணுகுமுறைக்குள் இருந்தனர் என்பதை சிந்தித்து நாட்டின் தலைவராவதற்கு அந்தஸ்தற்றவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வெற்றி வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் வேட்பாளர்கள் இலங்கை பொருளாதார ரீதியில் நாடு திவாலான நிலைக்குச்சென்ற போது சிங்கள மக்களிடத்தில் வெளிப்படையாகவே இந்த மோசமான நிலைமை அத்தனைக்கும் சொந்த தாய் நாட்டில் ஒரு தேசிய இனமான தமிழ் மக்கள் மீது அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடிய யுத்த செலவீனம் காரணம் என்பதை நாட்டிற்கு தெளிவு படுத்தவில்லை.

சர்வதேசத்திடம் கடன் வாங்கச் சென்ற அரசு தமிழ் மக்கள் உலக அளவில் புலம்பெயர்வினால் பொருளாதார ரீதியில் முன்னிலையில் உள்ளனர் என்ற அடிப்படையில் அவர்களது முதலீடுகளையும் பங்களிப்பினையும் நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவில்லை.

தமிழ் மக்கள் அங்கீகரிக்கத்தக்க அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்கு போர் மற்றும் போருக்கு பின் முன்னான சூழ்நிலைகளில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறல் இடம்பெற்று இருக்குமாயின் நாங்கள் ஒட்டுமொத்த இலங்கையராக முன்னேறியிருப்போம். இவற்றுக்கு இந்த பேரினவாத பௌத்த சிங்கள மேலாதிக்கத்தில் இருக்கக் கூடிய சிங்கள வேட்பாளர்கள் தயாரில்லை. அந்நிலையில் நாம் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம்.

எமது பிரச்சினைகளை முன்னிறுத்தும் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிப்போம் என்பதில் உறுதியாக இருப்போம் என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்




# துப்பாக்கிச்சூட்டுக்கு ஒருவர் உயிரிழப்பு

## சம்மாந்துறையில் நேற்றிரவு சம்பவம

வீடொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான பக்கீர் முகையதீன் றோஜான் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த துப்பாக்கி பிரயோகம் நேற்று இரவு 10.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே படுகொலைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்தள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் என கூறப்படும் சந்தேக நபரான சகோதரரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட டுள்ளது.

மேலும் குறித்த துப்பாக்கி பிரயோகம் சகோதரர்களிடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா அல்லது ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# டிரம்பை கொல்ல முயற்சித்த நபர் யார்? பின்னணி என்ன?

ஆன் பட்லலர்



அமெரிக்காவின் முன்னாள் அதிபரும், அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளருமான டொனால்ட் டிரம்ப் மீது தாக்குதல் நடத்த மீண்டும் முயற்சி நடந்துள்ளது. இரண்டு தினங்களுக்கு முன்னர் - ஞாயிற்றுக்கிழமை புளோரிடாவில் நடந்த இந்த கொலை முயற்சி சம்பவத்தைத் தொடர்ந்து, ரியான் வெஸ்லி ஷரூத் என்பவரை சந்தேகத்துக்குரிய நபராக அமெரிக்க ஊடகங்கள் கூறுகின்றன.

புளோரிடாவில் உள்ள கோல்ப் மைதானத்தில் நடந்த தாக்குதல் முயற்சியில் இருந்து டிரம்ப் தப்பிவிட்டார் என்றும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் சந்தேகிக்கப்படும் 58 வயதான ரியான் வெஸ்லி வட கரோலினாவைச் சேர்ந்தவர். அவரது சொத்து பதிவுகளின்படி, அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை வட கரோலினாவில் கழித்தார். ஆனால், அவர் சமீபத்தில் ஹவாயில் வசித்து வந்தார். ரியான் வெஸ்லியின் சில



செயல்பாடு, அவரது அரசியல் நிலைப்பாட்டின் கலவையான பிம்பத்தை பிரதிபலிக்கிறது.

ரஷ்ய போரில் தீவிர உக்ரைன் ஆதரவு நிலைப்பாட்டையும் அவர் கொண்டிருப்பதாக தெரிகிறது. அவர் பல சட்ட சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை அன்று புளோரிடாவில் உள்ள டிரம்ப்பின் சர்வதேச கோல்ஃப் மைதானத்திற்கு ஷரூத், ஏகே 47 ரக துப்பாக்கியுடன் சென்றதாக சந்தேகிக்கப்படுகிறது.

அந்த நபர் ஒரு புதரில் மறைந்திருந்ததாக எஃப். பி.ஐ சந்தேகிக்கிறது. அந்த புதரில் இருந்து ஆயுதம், ஸ்கோப்,கோ-புரோ கேமரா மற்றும் 2 பைகள் ஆகியவற்றை எஃப்.பி.ஐ மீட்டுள்ளது.

ஷரூத் தனது காரில் தப்பிச் சென்ற போதிலும், அவர் ஓட்டிச் சென்ற கருப்பு நிற நிசான் காரை ஒரு நபர் புகைப்படம் எடுத்தார். அவர்தான் இந்த விவகாரத்தின் முக்கிய சாட்சி.

அந்த காரின் அடையாளம் வெளியிடப்பட்டு அவசர எச்சரிக்கை விடப்பட்டது.

கோல்ஃப் மைதானத்தில் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்ட 45 நிமிடங்களுக்குப் பிறகு இரண்டு அதிகாரிகள் ஷரூத்தின் வாகனத்தை பின்தொடர்ந்ததாக பாம் பீச் கவுண்டியின் காவல் உயர் அதிகாரி ரிக் பிராட்ஷா கூறினார்.

ரஷ்யாவுக்கு எதிராக போரிட வெளிநாட்டு வீரர்கள் உக்ரைனுக்கு செல்ல வேண்டும் என்று ஷரூத் அழைப்பு விடுப்பதை அந்த சமூக ஊடகக் கணக்கு காட்டுகிறது.

“உங்கள் குழந்தைகள், குடும்பம் மற்றும் ஜனநாயகத்திற்காக நான் ஹவாயில் இருந்து உக்ரைனுக்கு வருகிறேன். உங்களுக்காக நான் உயிரையும் கொடுப்பேன்.” என்று எக்ஸ் தளத்தில் ஒரு பதிவு கூறுகிறது என்று பிபிசியின் அமெரிக்க கூட்டு செய்தி நிறுவனமான சிபிஎஸ் கூறுகிறது.

அவரது சமூக ஊடக கணக்குகளில் பாலத்தீன ஆதரவு, தாய்வான் ஆதரவு மற்றும் சீனாவுக்கு எதிரான பதிவுகளும் உள்ளன. சீன “உயிரியல் போர்” பற்றிய குற்றச்சாட்டுகள் மற்றும் கோவிட்-19 வைரஸை “தாக்குதல்” என்று குறிப்பிடும் விமர்சனமும் உள் ளது.

2020-ஆம் அவர் பதிவிட்ட ஒரு எக்ஸ் பதிவில் 2016-ஆம் ஆண்டு அவர் டிரம்பிற்கு வாக்களித்தார் என கூறுகிறார். ஆனால் பின்னர் ஏமாற்றமடைந்த அவர், “நீங்கள் சென்றது மிகவும் மகிழ்ச்சி” என பதிவிட்டதாக சிபிஎஸ் தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் டிரம்பின் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும் ஒரு பதிவை பகிர்ந்துள்ளார். பென்சில்வேனியாவில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்குமாறு அதிபர் ஜோ பைடன் மற்றும் துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆகியோரை ஷரூத் வலியுறுத்தி பதிவிட்டுள்ளார்.

ஷரூத் 2023 இல் நியூயார்க் டைம்ஸிடம் உக்ரைனில் போர் முயற்சிகளுக்கு உதவ விரும்புவதாகவும், தாலிபன்களிடம் இருந்து தப்பி ஓடிய ஆப்கானிஸ்தான் வீரர்களை பணியில் அமர்த்த விரும்புவதாகவும் கூறினார்.

தொலைபேசி வாயிலாக அவர் அளித்தப் பேட்டியில், 10க்கும் மேற்பட்ட வீரர்கள் ஆர்வமாக இருப்பதாகவும், அவர்களை பாகிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து உக்ரைனுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். மேலும் இதனை சட்டவிரோதமாக செய்யவும் தயார் என்று பேட்டியளித்தார்.

“பாகிஸ்தான் ஊழல் நிறைந்த நாடு என்பதால் நாங்கள் சில பாஸ்போர்ட்டுகளை பாகிஸ்தான் மூலம் வாங்க முடியும்” என்று அவர் கூறினார்.

உக்ரைனுக்கு கூடுதல் ஆதரவை வழங்கி உதவுவதற்காக, ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமெரிக்க ஆணையத்தை சந்திக்க தான் வாஷிங்டனில் இருப்பதாகவும் ஷரூத் பேட்டியில் கூறியிருந்தார்.

ஜூலை மாதம் வரை ஆட்சேர்ப்பு முயற்சிகளில் ஷரூத் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

ஜூலை மாதத்தில் அவர் பதிவிடப்பட்ட ஒரு முகநூல் பகிர்வில் , “வீரர்களே, தயவுசெய்து என்னை அழைக்காதீர்கள். ஆப்கானிஸ்தான் வீரர்களை உக்ரைன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக முயற்சிகளை செய்து வருகிறோம், வரும் மாதங்களில் பதில்கள் கிடைக்கும் என்று நம்புகிறோம். தயவுசெய்து பொறுமையாக இருங்கள்.” என கூறப்பட்டுள்ளது

உக்ரைனின் சர்வதேச வெளிநாட்டு தன்னார்வலர்களின் அமைப்பு, ஷரூத்தின் பதிவுக்கும் அமைப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று மறுத்துள்ளது.

சிபிஎஸ் செய்தியின்படி, 1990 களில் காசோலை மோசடி உட்பட ஷரூத் சில சட்ட சிக்கல்களை எதிர்கொண்டதாக பதிவுகள் காட்டுகின்றன.

ஷரூத் 2002 மற்றும் 2010க்கு இடையில் வட கரோலினாவில் உள்ள கில்ஃபோர்ட் கவுண்டியில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டார் என்றும் சிபிஎஸ் தெரிவித்துள்ளது.

2002 இல், மிக ஆபத்தான முழு தானியங்கி துப்பாக்கி வைத்திருந்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

அவர் 2016-ஆம் ஆண்டு டிரம்பை ஆதரித்ததாக அவரது சமூக ஊடகப் பதிவுகள் இருந்தபோதிலும், அவர் எந்த கட்சியிலும் சாராத வாக்காளர் என பதிவு செய்து வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

ஷரூத்தின் மகன் அவரை “அன்பான மற்றும் அக்கறையுள்ள தந்தை. நேர்மையான கடின உழைப்பாளி” என்று கூறியுள்ளார்.

அவரது மூத்த மகன் ஓரான், குறுஞ்செய்தி மூலம் சிஎன்என் உடன் பேசினார். “புளோரிடாவில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை, எதிர்பார்க்காத விஷயங்கள் நடந்திருப்பதாக நான் நம்புகிறேன், ஏனென்றால் நான் சிறிய வயதில் இருந்த பார்த்த நபர் அப்படியானவர் இல்லை. எனக்குத் தெரிந்த மனிதர் மிகவும் ஆக்ரோஷமானவர் இல்லை” என கூறியுள்ளார்.

ஷரூத் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக அதிகாரப்பூர்வ குற்றச்சாட்டுகள் எதுவும் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

சம்பவத்தின் போது அவர் தனது ஆயுதத்தை பயன்படுத்தி உண்மையில் துப்பாக்கி சூடு நடத்தினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

“ஒரு தனிநபரால் எங்களது அதிகாரிகளை சுடமுடியுமா என்பது எங்களுக்கு தெரியவில்லை. ஆனால், நிச்சயமாக சந்தேக நபருடன் எங்கள் அதிகாரிகள் பதில் தாக்குதல் நடத்தியிருப்பார்கள்” என்று ரகசிய சேவையின் மியாமி கள அலுவலகத்தின் ரஃபேல் பாரோஸ் கூறினார்.

பென்சில்வேனியாவில் டிரம்ப் மீதான முந்தைய கொலை முயற்சிக்குப் பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும், “அச்சுறுத்தல் அளவு அதிகமாக உள்ளது” என்றும் அவர் கூறினார்.

எஃப்பிஐ தனது விசாரணையை அறிவித்துள்ளது, மேலும் உள்ளூர் சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதாகக் கூறுகிறது.

ரகசிய சேவை மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் வட கரோலினாவின் கிரீன்ஸ்போரோவில் ஷரூத் முன்பு தங்கியிருந்த வீட்டையும் சோதனை செய்துள்ளனர்.

(பி.பி.சி)

# அமெரிக்காவின் எச்சரிக்கையை சாதாரணமாக எடுக்க முடியாது!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



இலங்கையில் நடக்கும் ஜனாதிபதித் தேர்தல்காலம்தொடர்பில்அமெரிக்காவினால் அந்நாட்டின்பிரஜைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது என்று தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீரவுக்கு ஆதரவாக கிரிபத்கொட நகரில் நடத்தபட்ட பிரசார கூட்டத்திலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

"இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில், தமது சுற்றுப்புறங்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது" என்று சுட்டிக்காட்டிய தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச, "உள்நாட்டு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் ஊடகங்களைக் கண்காணித்து புதிய தகவல்களின் அடிப்படையில் திட்டங்களை வகுத்துக் கொள்ளுமாறும் அமெரிக்கா, தமது நாட்டு பிரஜைகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது" என்றும் தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல் காலம் தொடர்பில் அமெரிக்காவினால் அந்நாட்டின் பிரஜைகளுக்கு விடுத்துள்ள இந்த பயண எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது" என்றும் தேசிய சுதந்திர முன் னணி தலைவர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளகாரணத்தால் இலங்கைக்குச்செல்லும் அமெரிக்கப்பிரஜைகளை எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய பயண ஆலோசனையில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலும், அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படலாம். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை நடத்தக்கூடும். ஆகையால், அமெரிக்கப் பிரஜைகள் எச்சரிக்கையாக செயற்படுமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகவே விமல் வீரவன்ச இப்போது தன்னுடைய கருத்துக்களைப் பதிவு செய்திருக்கின்றார்.

# ஒரு நாள் மட்டும் சபை கூடும்! நவம்பர் மாதம் பொது தேர்தல்

## அநுர ஆட்சி குறித்து விஜித ஹேரத் கருத்து



ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றதும் நாடாளுமன்றத்தை கலைக்க முன்னர் ஒருநாள் நாடாளுமன்றத்தை கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்ககவுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே விஜித ஹேரத் தெரிவித துள்ளார்.

அதன்போது அவர் கூறுகையில்,

22ஆம் திகதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியானதும் ஒருநாள் நாடாளுமன்றத்தை கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதன்போது அநுரகுமாரவின் நாடாளுமன்ற ஆசனத்திற்கு ஏற்படும் இடைவெளியை நிரப்ப கொழும்பு மாவட்டத்தில் லக்ஷ்மன் நிபுணாராட்சி எம்.பியாவார்.

அதன் பின்னர் எமது மூன்று பேரை கொண்ட புதிய அமைச்சரவையை தற்காலிகமாக

அமைத்து நாடாளுமன்றம் கலைக்கப்படும். அத்துடன் அமைச்சரவை அமைக்கப்படும் போது புதிய பிரதமர் நியமிக்கப்படுவார். அவர் பெண்ணாகவும் இருக்கலாம்.

அமைச்சரவை அமைப்பது தொடர்பில் வேறு மாற்று வழிகளும் இருக்கின்றன. அதனை அவ்வேளையில் செய்யலாம். இதேவேளை நவம்பர் நடுப்பகுதியில் நாடாளுமன்றத்

தேர்தல் நடக்கலாம் அதன்போது எமது கட்சியினர் அதிகளவில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகுவர். அதன் பின்னர் 25 பேரை கொண்ட அமைச்சரவையை அமைக்கவும்

நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பிரதமராக ஒரு பெண்ணாக இருக்கலாம் என்றும் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தலில் செப்டெம்பர் 21 ஆம் திகதி வெற்றி பெற்றதன் பின்னர் அரசியலமைப்பின் 47 ஆம் சரத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் புதிய அமைச்சரவையொன்று நியமிக்கப்பட்டு நாடாளுமன்றம் கலைக்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்

வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை

மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்

கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி

மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

## புவிசார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய ஊடகம் ஒன்றுக்களித்த நேர்காணலில் இதனைத் தெரிவித்த அவர், "இதுஇலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு தேர்தல். ஒவ்வொரு தேர்தலிலும் அதிகாரம் ஆளும் ஒரு தரப்பிலிருந்து மற்றைய தரப்பின் கரங்களிற்கு செல்லும். ஆரம்பத்தில் இந்த குழுக்கள் தனித்தனி அடையாளங்களை கொண்டிருந்தன.

ஆனால் கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக அவை கிட்டத்தட்ட பிரித்தறிய முடியாத அளவிற்கு ஒன்றிணைந்துள்ளன. இதன் காரணமாக 1994 முதல் அரசாங்கங்கள் மாறியுள்ள போதிலும், பல தனிநபர்கள் அமைச்சு பதவிகளில் நீடிக்கின்றனர். சிலர் காலப்போக்கில் முரண்பட்ட அமைச்சரவை திருத்தங்களை ஆதரித்துள்ளனர்.

இதுவரை தேர்தல்கள் ஆட்சிக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஆகவே எங்கள் நாட்டின் அரசியல் சமூக பொருளாதார பாதையை மீளவடிவமைப்பதற்கு புதிய பாதையில் செலுத்துவதற்கு தனித்துவமான வாய்ப்பை வழங்குவதால் இந்த தேர்தல் மிகவும் முக்கியமானது.

இந்த தேர்தல் ஒளிமயமான எதிர்காலம் என்ற வாக்குறுதியுடன் அரசாங்கத்தை மக்களிற்கு நெருக்கமாக கொண்டுவருகின்றது. நாங்கள் முன்னரும் இந்த இலக்குகளை முன்வைத்துள்ள போதிலும் இம்முறையே அர்த்தபூர்வமான மாற்றத்தை மேற்கொள்வதற்கான அதிகாரம் எங்களிற்குள்ளது. அதிகாரத்தின் பாரம்பரிய சுழற்சிகளில் இருந்து விலகி மக்கள் நலனில் வேரூன்றிய பொது இயக்கத்தினால் அதிகார பரிமாற்றம் முன்னெடுக்கப்படும்" என்று அநுரகுமார தெரிவித்தார்.

## வாக்கெண்ணும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக்கள ஆய்வில் உதவித்தேர்தல்கள் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. ஜே. ஹாலிங்க ஜெயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

## தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரும், காலி மாவட்டத்திலிருந்து 903,163 பேரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 686,175 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 520,940 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 593,187 பேரும், வன்னி மாவட்டத்திலிருந்து 306,081 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 449,686 பேரும், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 555,432 பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 315,925 பேரும், குருணாகல் மாவட்டத்திலிருந்து 1,417,226 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 663,673 பேரும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 741,862 பேரும், பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 351,302 பேரும், பதுளை மாவட்டத்திலிருந்து 705,772 பேரும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 399,166 பேரும், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 923,736 பேரும், கேகாலை மாவட்டத்திலிருந்து 709,622 பேரும் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## அதிகாரத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஹெட்டிபொல நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"வறுமையை ஒழிக்கும் முகமாக அனைத்து வரிய குடும்பங்களுக்கும் 24 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 20 ஆயிரம் ஷரூபா வீதம் முதலீடு, உற்பத்தி, நுகர்வு, சேமிப்பு

மற்றும் ஏற்றுமதி ஆகிய பிரிவுகளுக்குள்ளடக்கி நிவாரணங்களை வழங்குவோம். எவரும் தொடர்ந்தும் வறியவர்களாக இருப்பதற்கு விருப்பமில்லாதமயால் நாம் வறுமையே ஒழிப்போம்.

தமக்கென்று வீடும் காணியுமில்லாதவர்களுக்கு வீட்டையும் காணிக்கான உரிமையும் பெற்றுக் கொடுப்போம்.

50 கிலோ கிராம் உள்ள உர மூடை ஒன்றை 5000 ஷரூபாவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும். பெரிய வெங்காய உற்பத்தியாளர்களையும் பாதுகாப்போம். பெரிய வெங்காயம், சோளம், உருளைக்கிழங்கு என்பன அறுவடை செய்யப்படுகின்ற போது ரணில் விக்கிரமசிங்க அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றார். விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாக்கின்ற நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும்.

விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்குகின்ற அதேவேளை விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், ஓட்டோ உரிமையாளர்களுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பஸ் உரிமையாளர்களுக்கும், சக்தி அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்குவோம். இந்த எரிபொருள் நிவாரணம் செல்வந்தர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. எரிபொருள் நிவாரணத்தை தொழிலாளர் வர்க்கத்திற்கே வழங்குவோம். செல்வந்தர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் எரிபொருள் நிவாரணம் வழங்க வேண்டிய தேவை இல்லை.

இந்த நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களை மையப்படுத்தி ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்குவோம். அதன் ஊடாக அனைத்து நிர்வாக மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிப்போம். அத்தோடு ஜனாதிபதியை மக்கள் தொடர்பு கொள்வதற்கு தனியான அலகொன்றையும் நிறுவுவோம். மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறையான தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு கிராமங்களையும் நகரங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் கம் உதாவ நகர உதாவ வேலை திட்டங்களை மேற்கொள்வோம்" என்றார்.

## பிரசாரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் காலப்பகுதியில் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 30 முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதேவேளை, இதுவரையில் தங்களது கிடைக்கப்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 3,828 முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு கண்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எஞ்சிய 583 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.







# பிரான்ஸ் தேர்தல்: மீறப்பட்ட மக்கள் தீர்ப்பு

பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் நான்காம் இடத்தைப் பெற்ற கட்சியின் மிஷேல் பார்னியே, அந்நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, அந்நாட்டில் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. சித்தாந்த மோதல்களை மேலும் கூர்மைப்படுத்தும் காரணியாக இந்த நிகழ்வு அமைந்துவிட்டது.



ஜூன் 9 அன்று நடைபெற்ற ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் பிரான்ஸின் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசியப் பேரணி (National Rally) அதிக இடங்களைப் பெற்றது. மையவாத அரசியலைப் பின்பற்றும் அதிபர் இம்மானுவேல் மக்ஷரூனின் மறுமலர்ச்சிக் கட்சி (Renaissance) பெரும் பின்னடைவை எதிர்கொண்டது.

இந்நிலையில், பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தனது கட்சிக்குப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு, தீவிர வலதுசாரி அரசியலுக்கு எதிரான, தெளிவான மக்கள் தீர்ப்பைப் பெறுவது அவசியமாகிவிட்டதாகக் கூறி நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டி நடத்த மக்ஷரூன் உத்தரவிட்டார். இது தீவிர வலதுசாரிகளின் செல்வாக்கை வலுப்படுத்தவே உதவும் என்று சர்வதேச ஊடகங்கள் எச்சரித்தன. இப்போது அந்த எச்சரிக்கை மெய்யாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் புலம்பெயர் மக்களுக்கு எதிரான மனநிலையை முன்வைத்து அரசியல் செய்யும் வலதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரித்துவரும் சூழலில், பிரான்ஸ் தேர்தலிலும் வலதுசாரிக் கட்சியே ஆட்சி அமைக்கும் என்று தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகள் கூறின. அதை மெய்ப்பிக்கும் விதமாக ஜூன் 30 அன்று நடத்தப்பட்ட முதல் கட்டத் தேர்தலில் தேசியப் பேரணிக்கு அதிகத் தொகுதிகள் கிடைத்தன.

ஆனால், ஜூலை 7 அன்று நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலில் காட்சிகள் மாறின. இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணியான புதிய வெகுஜன முன்னணி (New Popular Front) ஒட்டுமொத்தமாக 182 இடங்களைக் கைப்பற்றியது. மக்ஷரூனின் கட்சியை உள்ளடக்கிய மையவாதக் கூட்டணிக்கு 168 இடங்களும், தேசியப் பேரணிக்கு 143 இடங்களும் கிடைத்தன. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை (289 இடங்கள்) யாருக்கும் கிடைக்கவில்லை.

இந்நிலையில், செப்டம்பர் 5 அன்று பார்னியேவைப் பிரதமராக அறிவித்தார் மக்ஷரூன். பிரான்ஸ் நாடாளுமன்ற அமைப்பில் யாரை வேண்டுமானாலும் பிரதமராக நியமிக்கும் அதிகாரம் அதிபருக்கு உண்டு. ஆனால், பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரும் அவர் தலைமையிலான அரசும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிஷரூபிக்க வேண்டும். இந்தச் சூழலில் இடதுசாரி அரசுக்கு ஆதரவளிக்கப் பல கட்சிகளுக்கு விருப்பம் இல்லை என்பதால், அரசியல் நிலைத்தன்மையைக் கருத்தில கொண்டு மக்ஷரூன் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால், பார்னியேவின் பழமைவாதக் குடியரசுக் கட்சி (Conservative Republican Party) 46 இடங்களில் மட்டுமே வென்றுள்ளது. பல கட்சிகளின் ஆதரவுடன்தான் பார்னியே ஆட்சி அமைக்க முடியும். எனவே, தேசியப் பேரணிக் கட்சி உறுப்பினர்கள் உள்பட தீவிர வலதுசாரிகள் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் இருத்தல் உள்ளிட்ட மறைமுக ஆதரவை வழங்கினால் மட்டுமே பார்னியே ஆட்சி செய்ய முடியும். இது தேர்தல் நடத்தப்பட்டதன் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கிவிட்டது. குடியேறிகளுக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கடுமையாக்கப்போவதாக பார்னியே அறிவித்திருப்பது அவரது அரசின் திசைவழியைச் சுட்டுகிறது.

மக்ரூனின் நடவடிக்கை இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளையும் வாக்காளர்களையும் அதிர்ச்சியடையவைத்துள்ளது. மக்கள் வீதியில் இறங்கிப் போராடிவருகின்றனர். யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத சூழலில், அதிக இடங்களைப் பெற்ற கட்சியையோ கூட்டணியையோ ஆட்சி அமைக்க அழைப்பதே ஜனநாயக நெறிமுறை. மக்கள் தீர்ப்பை உதாசீனப்படுத்தியிருக்கும் மக்ஷரூன், அவர் எதிர்ப்பதாகக் கூறிக்கொண்ட தீவிர வலதுசாரிகள் வலிமைபெறுவதற்கும் வழிவகுத்திருப்பதுதான் இந்தத் தேர்தலில் நிகழ்ந்திருக்கும் விநோதம்!

(இந்து)





# கிரிக்கெட் கவுன்சில் வழங்கிய விளையாட்டு உபகரணங்கள்!

( காரைதீவு சகா)

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை காரைதீவு விளையாட்டு கழகத்திற்கு வழங்கியுள்ளது .

விளையாட்டுத்துறை இளைஞர்விவகார அமைச்சின் விளையாட்டு அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அதனை நேரில் சென்று கழகச் செயலாளர் எஸ். கிருஷாந்தனிடம் வழங்கி வைத்தார் .

இதற்கு இணைப்பாளராக இருந்து செயல்பட்ட விளையாட்டு கழக ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி. ரி. சகாதேவராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் லோ. சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# ஷீல்ட் ரக்பி சம்பியன்சிப் போட்டியில் மதீனா தேசிய கல்லூரி சம்பியன்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாண ரக்பி நடுவர் சங்கமும், மத்திய மாகாண ரக்பி சம்மேளனமும் இணைந்து மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ரக்பி போட்டியில் மடவள மதீனா தேசிய கல்லூரி சம்பியனானது.

பல்லேகல திருத்துவ கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் மடவள மதீனா தேசிய கல்லூரி தலாது ஓயா தேசிய கல்லூரியை 31:7 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டு ஷீல்ட் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.09.2024இல் வெளியிடப்பெற்றது.